## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

( சுருக்கம் )

நிறுவனம் - தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (முன்னர் தமிழ்நாடு மின்சார வாரியம்) - ஓய்வூதியதாரர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் - ஓய்வூதியர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்குதல் - நிபந்தனையை நீக்கி ஆணை வெளியிடப்படுகின்றது.

---

( செயலகக் கிளை )

(நிலை) த.நா.மி.உ.ம.ப.க. முழு வாரிய செயல்முறை ஆணை எண்.23 நாள் 03-08-2011.

படிக்கவும்:

1. வாரிய நிலையாணை (முழு வாரியம்) எண்.21 (செயலகக் கிளை), நாள் 26.03.1997.
2. வாரிய நிலையாணை (முழுவாரியம்) எண்.74 (செயலகக் கிளை), நாள் 30.09.2000.
3. வாரிய நிலையாணை (தலைவர்) எண்.42 (செயலகக் கிளை), நாள் 14.02.2002.
4. அரசாணை எண்.416, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 18-11-2010.

******

செயல்முறைகள்:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட வாரிய நிலையாணையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் (முன்னர் தமிழ்நாடு மின்சார வாரியம்) ஓய்வூதியதாரர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் என்ற ஒரு திட்டம், தமிழக அரசின் ஆணை எண்.762, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 31.12.1996யினை பின்பற்றி, 01.04.1997-க்குப் பிறகு ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, 31.03.1997 அன்று ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு மாதச் சந்தா ரூ.40/- என முதலில் நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் பின்னர் தமிழக அரசின் ஆணைகளைப் பின்பற்றி, பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட வாரிய நிலையாணைகளில், மேற்கண்ட திட்டத்திற்கான மாதச் சந்தாவானது ரூ.40/-லிருந்து முறையே ரூ.60/- மற்றும் ரூ.70/-ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டம் ஓய்வூதியதாரர்களிடம் இருந்து பெறப்படும் சந்தாத் தொகையைக் கொண்டு நிறைவேற்றப்படும் ஒரு சுயநிதித் திட்டமாகும்.

**2.** மேற்குறிப்பிட்ட திட்டத்தின்படி, 12 மாதங்களுக்கு தொடர்ந்து சந்தா தொகையினை செலுத்தி, அதன் பின்னர் ஓய்வூதியதாரர் இறக்க நேர்ந்திட்டால், அவரால் வாரிசாக நியமனம் செய்யப்பட்ட அவரது மனைவி அல்லது கணவன் அல்லது வாரிசுதாரர்களுக்கு ரூ.25,000/- உதவித் தொகையாக வழங்கப்படும். எனவே, இத்திட்டத்தில் சேர்ந்து 12 மாதங்களுக்குள் ஓய்வூதியதாரர் ஒருவர் இறக்கும் நேர்வுகளில், இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகையை அவரது வாரிசுதாரருக்கு வழங்க இயலாத நிலை இருந்தது. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை நீக்கி, ஓய்வூதியதாரர் ஒருவர், ஓய்வூதியத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகையை செலுத்தியிருந்தாலே, அவர் இறக்கும் நேர்வில், அவரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை ரூ.25,000/- வழங்கலாம் என பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணை வாயிலாக தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அவ்வரசாணையை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலும் பின்பற்றுவது குறித்து தீர பரிசீலிக்கப்பட்டது. அவ்வரசாணையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (முன்னர் தமிழ்நாடு மின்சார வாரியம்) ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் அமல்படுத்திட வேண்டி அனைத்து ஓய்வூதியர் சங்கங்களும் கோரிக்கை விடுத்தன. எனவே, அனைத்து சங்கங்களிடமும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, மேற்கண்ட அரசாணையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் அமல்படுத்தும் நாள் முதல் நடைமுறைக்கு கொண்டு வரலாம் என்று இருதரப்பும் இசைவு தெரிவித்துள்ளதன் அடிப்படையில் கருத்துரு வாரியக் கூட்டத்தில் வைக்கப்பட்டது. தீவிர பரிசீலனைக்குப் பின்னர், மேற்குறிப்பிட்ட அரசாணையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் (முன்னர் தமிழ்நாடு மின்சார வாரியம்) அமல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**3.** அதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக "ஓய்வூதியதாரர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தில்" சேர்ந்த ஓய்வூதியதாரர் ஒருவர், அவரது ஓய்வூதியத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகையினை செலுத்தியிருந்தாலே, அவர் இறக்கும் நேர்வில், அவரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக ரூ.25,000/-த்தை வழங்கலாம் என ஆணையிடப்படுகிறது.

**4.** இத்திட்டத்தின் கீழான பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

**5.** இவ்வாணை, ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

**6.** இவ்வாணையை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை தவறாமல் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள சீட்டில் அளிக்கவும்.

( வாரியத்தின் ஆணைப்படி )

அ.அருணகிரி,
செயலாளர் (கூடுதல் பொறுப்பு).

பெறுநர்

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / ( பொது ) மற்றும் ( வருவாய் ).
தலைமை உட்தணிக்கை அலுவலர் / தணிக்கைக் கிளை.
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்.
தன்னகத் தணிக்கை அலுவலர் ( மாநில கணக்குத் துறைத் தலைவர் ).

நகல்

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பார்வைக்கு.
மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
அனைத்து இயக்குநர்கள் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
செயலாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்.
காவல் துறை தலைவர் / விழிப்புப் பணி.
சட்ட ஆலோசகர்.
மேற்பார்வைப் பொறியாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
துணைத் தலைமைப் பொறியாளர் / நிர்வாகக் கிளை.
அனைத்து துணைச் செயலாளர்கள் / செயலகக் கிளை.
அனைத்து சார்புச் செயலாளர்கள் / செயலகக் கிளை.
தொழில் உறவு ஆலோசகர்.
இயக்குநர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக பதிப்பகம்.
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்.
உதவி பணித்தொகுதி அலுவலர் / தமிழ் வளர்ச்சி – இதழில் பிரசுரிப்பதற்காக.
அனைத்துப் பிரிவுகள் / செயலகக் கிளை.

www.tnebes.org

தலைவர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற அலுவலர்கள் நல அமைப்பு,
எண்.14, ( பழைய எண்.7 ), 2வது பிரதான சாலை, ராம் நகர், சென்னை-600 082.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம்,
எண்,52/54, மின் நகர், காஜாமலை, திருச்சிராப்பள்ளி-620 023.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின் வாரிய ஓய்வூதியதாரர் முன்னேற்றச் சங்கம்,
எண்.9, சுந்தரம் செட்டி தெரு, கொட்டிகுளம் சாலை, திண்டுக்கல்-624 001.
பொதுச் செயலாளர்/மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு,
எண்.27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் அசோசியேஷன்,
எண்.16, பத்தாவது கிழக்கு பிரதான சாலை, காந்தி நகர், வேலூர்-6.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நலச்சங்கம், எண்.18, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033.
இருப்புக் கோப்பு.

// உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

மா. பாஸ்கரன்
பிரிவு அலுவலர்

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
( சுருக்கம் )

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் - ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் - கூடுதல் ஓய்வூதியம் மற்றும் கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

( செயலகக் கிளை )

(நிலை) த.நா.மி.உ.ம.ப.க. முழு வாரிய செயல்முறை ஆணை எண்.24 நாள் 06-08-2011.

ஆடி-21,
திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கவும்:

அரசாணை எண்.42, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 07-02-2011.

*******

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தமிழக அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அவ்வரசாணையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (முன்னர் தமிழ்நாடு மின்சார வாரியம்) ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் அமல்படுத்திட வேண்டி அனைத்து ஓய்வூதியர் சங்கங்களும் கோரிக்கை விடுத்தன. எனவே, அனைத்து சங்கங்களிடமும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, மேற்கண்ட அரசாணையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் அமல்படுத்தும் நாள் முதல் நடைமுறைக்கு கொண்டு வரலாம் என்று இருதரப்பும் இசைவு தெரிவித்துள்ளதன் அடிப்படையில், கருத்துரு வாரியக் கூட்டத்தில் வைக்கப்பட்டது. தீவிர பரிசீலனைக்குப் பின்னர், மேற்குறிப்பிட்ட அரசாணையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ( முன்னர் தமிழ்நாடு மின்சார வாரியம் ) 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் அமல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2. அதன்படி, 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் கீழ்கண்டவாறு வழங்கப்படவேண்டும் என ஆணையிடப்படுகிறது:-

| வ.எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் |
|---|---|---|
| 1 | 80 முதல் 84 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20% |
| 2 | 85 முதல் 89 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30% |
| 3 | 90 முதல் 94 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40% |
| 4 | 95 முதல் 99 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50% |
| 5 | 100 மற்றும் அதற்கு மேல் | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100% |

அடிப்படை ஓய்வூதியம் என்பது ஓய்வூதியத்தை தொகுத்து பெறுவதற்கு முன்னதான **(before commutation)** முழு ஓய்வூதியத்தை குறிப்பதாகும்.

3. மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் ஓய்வூதியத்தை / கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தை கீழ்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி வழங்கப்படவேண்டும்:-

| வ.எண். | விவரம் |
|---|---|
| 1 | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் தனியே காண்பிக்கப்பட வேண்டும். |
| 2 | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் அகவிலைப்படி கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |
| 3 | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் 80 / 85 / 90 / 95 / 100 வயதை நிறைவு செய்யும் மாதத்தின் முதல் நாள் முதலோ அல்லது 01-08-2011 அன்றோ, இதில் எது பின்னரோ, அன்று முதல் கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். |

4. ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரரின் வயதை சரிபார்ப்பதற்கு ஓய்வூதிய கொடுப்பாணை **(Pension Payment Order)** அடிப்படை ஆவணமாக இருக்க வேண்டும். ஓய்வூதிய கொடுப்பாணை இல்லாத நேர்வுகள் மற்றும் ஓய்வூதிய கொடுப்பாணையில் வயது குறித்தான பதிவுகள் இல்லாத நிலையில், 80 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தங்களின் வயதினை நிரூபிக்க, கீழ்கண்ட ஏதேனும் ஒரு ஆவணத்தை தனது விண்ணப்பத்துடன் இணைத்து அவர்களது ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதிய முன்மொழிவினை (Pension Proposal) அனுப்பி வைத்த அலுவலரிடம் சமர்ப்பித்திட வேண்டும்:-

www.tnebes.org

1. மத்திய வருமான வரி அலுவலகத்தால் வழங்கப்படும் நிலையான கணக்கு எண்ணிற்கான அட்டை **(Permanent Account Number – PAN Card).**
2. பள்ளி இறுதித் தேர்வு தேர்ச்சி சான்றிதழ்.
3. கடவுச் சீட்டு (Passport)
4. ஓட்டுநர் உரிமம் (வயது குறித்த கலம் நிரப்பப்பட்டிருந்தால்)
5. இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை.

5. மேற்காணும் ஆவணங்களில் ஒன்றை ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர் சமர்ப்பிக்கும் நேர்வில், ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் வழங்க ஒப்பளிப்பு அளிக்கும் அலுவலர் **(Pension Sanctioning Authority)** அவர்தம் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களிலிருந்து ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரின் வயதினை ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கு **(Pension Authorising Authority)** அதாவது தலைமை உட்தணிக்கை அலுவலர் / தணிக்கைக் கிளை / சென்னை-2 அவர்களுக்கு உறுதி செய்திட வேண்டும். ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் **(Pension Authorising Authority)**, கூடுதல் ஓய்வூதியத்தை / கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரரின் வயதை உறுதி செய்த பின்னரே வழங்கலாம்.

6. பகிர்வு முறையில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களை பொறுத்தவரையில் கூடுதல் குடும்ப ஓய்வூதியம் விகிதாச்சாரத்திற்கிணங்க பிரித்து வழங்கப்படவேண்டும்.

7. அனைத்து தலைமைப் பொறியாளர்கள் / மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் இவ்வாணையில் உள்ள சலுகைகள் வேண்டி அளிக்கும் விண்ணப்பங்கள் மீது தனிக்கவனம் செலுத்தி அவர்களது வயதினை மேற்கண்ட நடைமுறையை பின்பற்றி உறுதி செய்து, காலதாமதமின்றி தலைமை உட்தணிக்கை

அலுவலர் / தணிக்கைக் கிளை / சென்னை-2 அவர்களுக்கு எவ்வித குறைபாடுமின்றி, ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாவண்ணம் உடனுக்குடன் அனுப்பி வைக்கவேண்டும்.

8. இவ்வாணையை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை தவறாமல் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள சீட்டில் அளிக்கவும்.

( வாரியத்தின் ஆணைப்படி )

அ.அருணகிரி,
செயலாளர் (கூடுதல் பொறுப்பு).

பெறுநர்
அனைத்து தலைமைப் பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / ( பொது ) மற்றும் ( வருவாய் ).
தலைமை உட்தணிக்கை அலுவலர் / தணிக்கைக் கிளை.
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்.
தன்னகத் தணிக்கை அலுவலர் ( மாநில கணக்குத் துறைத் தலைவர் ).

நகல்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பார்வைக்கு.
மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
அனைத்து இயக்குநர்கள் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
செயலாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்.
காவல் துறை தலைவர் / விழிப்புப் பணி.
சட்ட ஆலோசகர்.
மேற்பார்வைப் பொறியாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
துணைத் தலைமைப் பொறியாளர் / நிர்வாகக் கிளை.
அனைத்து துணைச் செயலாளர்கள் / செயலகக் கிளை.
அனைத்து சார்புச் செயலாளர்கள் / செயலகக் கிளை.
தொழில் உறவு ஆலோசகர்.
இயக்குநர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக பதிப்பகம்.
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்.
உதவி பணித்தொகுதி அலுவலர் / தமிழ் வளர்ச்சி - இதழில் பிரசுரிப்பதற்காக.
அனைத்துப் பிரிவுகள் / செயலகக் கிளை.

தலைவர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற அலுவலர்கள் நல அமைப்பு,
எண்.14, ( பழைய எண்.7 ), 2வது பிரதான சாலை, ராம் நகர், சென்னை-600 082.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வூதியதர் சங்கங்களின் சம்மேளனம்,
எண்.52/54, மின் நகர், காஜாமலை, திருச்சிராப்பள்ளி-620 023.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின் வாரிய ஓய்வூதியதாரர் முன்னேற்றச் சங்கம்,
எண்.9, சுந்தரம் செட்டி தெரு, கொட்டிகுளம் சாலை, திண்டுக்கல்-624 001.
பொதுச் செயலாளர்/மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு,
எண்.27, மருதி தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் அசோசியேஷன்,
எண்.16, பத்தாவது கிழக்கு பிரதான சாலை, காந்தி நகர், வேலூர்-6.
பொதுச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நலச்சங்கம், எண்.18, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033.
இருப்புக் கோப்பு.

// உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

www.tnebnet.org